**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

**************

**ஊடக அறிக்கை**

இந்தியாவின் ஓ நாகா குழுவினர் கொழும்பில் ஆற்றுகை

இலங்கையின் விசாகா வித்யாலய மாணவிகள் குழாம் மற்றும் இந்தோனேஷியாவின் பிரிசிலியா மிக்ஸ்ட் குழுவினருடன் இணைந்து இந்தியாவின் ஓ நாகா குழுவினர் மூன்றுநாடுகளின் “சமாதானத்துக்கான ஆற்றுகை” ஒன்றில் பங்குபற்றியிருந்தனர். இந்த நிகழ்வு திரு ரொஹான் டீ லனோரோலால் லயனல் வென்ட் அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தியாவின் வட கிழக்கின் நாகலாந்து மாநிலத்தின் ஏனைய பழங்குடியினத்தை சேர்ந்தவர்களுடன் இணைந்து ஓ நாகா பழங்குடியினத்தவர்கள் தமது சிறப்பியல்புகளுடன் பல்வேறு சர்வதேச அரங்குகளில் தமது ஆற்றுகைகளை வெளிப்படுத்தியுள்ளனர். இவர்களின் கலை மற்றும் சமூக பங்களிப்புக்காக ஐக்கிய நாடுகள் சபையின் “சமாதான தேவதை” விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் வட கிழக்கு முனையில் அமைந்திருக்கும் நாகலாந்து வரலாறு கலாசாரம் மற்றும் பன்முகத்தன்மைக்கான சிறப்பியல்புகளை க்கொண்டிருக்கிறது. இங்கு 16 வகை பழங்குடியின மக்கள் தமக்கேயான கலாசார விழுமியங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு பழங்குடியின மக்களும் பின்பற்றும் பாரம்பரியம் ஆண்டு முழுவதையும், செழுமை, சமூகப் பிணைப்பு, உத்வேகம் மற்றும் தூய்மை ஆகியவற்றை மையப்படுத்தியகொண்டாட்டங்களாக மாற்றுகின்றது. இந்த பாரம்பரிய நிகழ்வுகள் கிராமப்புறங்களில் வாழ்வுடன் பிணைந்ததாக மாறும் நிலையில் இந்தியாவின் மலைப்பாங்கான இப்பகுதிக்கு அதிகளவான உல்லாசப்பயணிகள் வருகைதருவதற்கு காரணமாக அமைகின்றன.

இந்த மாநிலமானது உள்ளூர் மூங்கில்களிலான கட்டடக்கலை, புராதன பாரம்பரியம் ஆகியவற்றுக்கும் பிரபலமானதாக இருக்கும் நிலையில் உலகின் மிகவும் காரமான மிளகாய்களில் ஒன்றான புட்ஜொலோக்கியா (BhutJolokia) இங்கு மிகவும் பிரபலமான ஒன்றாகும்.

நாகலாந்தின் பிரபலத்தன்மைக்கு அண்மையில் மேலும் பெருமை சேர்த்த விழாவாக ஹோண்பில் பண்டிகை(Hornbill) அமைகிறது. இந்த நிகழ்வு உலகம் சுற்றுபவர்களின் நாட்காட்டியில் இடம்பிடிக்கின்றது. டிசம்பர் முதல் வாரத்தில் ஹோண்பில் பண்டிகை கொண்டாடப்படும் காலப்பகுதியில் கோஹிமா மாவட்டத்தின் கிசாமா கிராமத்தில் முழுமையான நாகா கலாசாரமும் மிகவும் பிரமாண்டமாக காண்பிக்கப்படும். இந்த நிகழ்வுகள் நாகலாந்து மாநில அரசாங்கத்தால் ஒழுங்கமைக்கப்படும் நிலையில் நாகலாந்தின் சகல பாரிய பழங்குடியின மக்களும் வருகை தருவார்கள். அங்கு பாரம்பரிய கலைகள், நடனங்கள், நாட்டுப்புற பாடல்கள், சுதேசிய விளையாட்டுக்கள் என்பன நடைபெறும். இந்த சகல நிகழ்வுகளும் பழங்குடியின மக்களின் குடில்களின் மாதிரிகளுக்கு மத்தியில் நடைபெறும் அதேவேளை நாளின் இறுதியில் பாரிய மேளங்களும் இசைக்கப்படும்.

பண்டிகைகளின் கொண்டாட்டம் எனப்படும் ஹோண்பிள் பண்டிகை முழுவாரமும் நீடிக்கும் கலாசார நிகழ்வுகள், சுதேசிய விளையாட்டுப் போட்டிகள், கைவினை கண்காட்சிகள், இசை நிகழ்வுகள், பெஷன், சைக்கிளோட்டம், மோட்டார் வாகன விளையாட்டுக்கள், சினிமா மற்றும் பல்துறை சார் போட்டிகள் ஆகியவற்றை கொண்டிருக்கும்.

நாகலாந்து புதுமைகள் நிறைந்த மாநிலமாக இருக்கும் அதே வேளை ஓ நாஹா குழுவினர் தமது சிறப்பான ஆற்றுகைகள் மூலமாக பார்வையாளர்களை உச்சத்துக்கு அழைத்துச் செல்கின்றனர்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வுக்கு இலங்கை சுற்றுலாத்துறை, இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் கொழும்பிலுள்ள இந்தோனேசியக் குடியரசின் தூதரகம் ஆகியவை அனுசரணை வழங்கியிருந்தன.

* * * * *

கொழும்பு

31 ஒக்டோபர் 2019